# ஆறுபடை வீடு பொறியியல் கல்லூரியில் மணிமொழியனார் முத்தமிழ் ஆய இலக்கிய விழா








பையனூரில் அமைந்திருக்கும் ஆறுபடை வீடு பொறியியல் கல்லூரியின் மணிமொழியனார் முத்தமிழ் ஆயத்தின் சார்பாக ,இலக்கிய விழா நடைபெற்றது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக சிங்கபூர் புகழ் புதுமைத் தேனீ பா .அன்பழகன் அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார் .சிங்கப்பூர் வாழ் தமிழர்களின் வாழ்வியல் முறையையும் ,இலக்கியத்தோடு அவர்களுக்கு இருக்கும் தொடர்பினையும் மிக அருமையாக விளக்கிக் கூறினார். விழாவிற்கு பல்கலைகழகத்தின் இயக்குநர் டாக்டர் அனுராதா கணேசன் அவர்கள் தலைமை தாங்கினார் . முத்தமிழ் கவிஞர் மோகனரங்கன் அவர்கள் அறிமுகவுரை வழங்கினார். விழாவில் கல்லூரியின் முதல்வர் முனைவர் சங்கர் ,இயக்குநர் முனைவர் ஷண்முகவள்ளி ,உமா சங்கர் மற்றும் நிர்வாக முதன்மை அதிகாரி திரு உமா சங்கர் ஆகியோர் கலந்துக் கொண்டு உரையாற்றினர் .

உலகத் திருக்குறள் பேரவையின் செயலாளர் கவிஞர் மார்ஷல் முருகன் விழாவைத் தொகுத்து வழங்கினார் .விழா எற்பாடுகளை கல்லூரியின் கட்டிடத் துறைத் தலைவி முனைவர் சங்கீதா செய்திருந்தார்.

விழாவின் இறுதியில் மாணவ மாணவியரின் சிங்கபூர் தமிழர்களின் கலாச்சாரம் ,உணவு முறைகள் ,பழக்க வழக்கங்கள் குறித்த கேள்விகளுக்கு பதிலளித்தார் சிறப்பு விருந்தினர் அன்பழகன் அவர்கள் .அனைவரையும் தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் பெயர் சூட்டுமாறு வேண்டுகோள் விடுத்தார்.